Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.231/2020

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.முகமது ரியாஷ் | Occupation | |
| Father's name | ரஹமத் அப்துல்லா | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of February 2026.

18.02.2026

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை—

கடந்த 29.12.2019 அன்று நானும் வெங்கடேஷ் என்பவரும் ராக்காட்சியம்மன் கோவில் நுழைவு வாயில் அருகே சென்றபோது மம்சாபுரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் தணிக்கை செய்துகொண்டிருந்ததாகவும் அப்போது ஒரு நபரை மடக்கி பிடித்ததாகவும் எங்கள் இருவரையும் நிறுத்தி மம்சாபுரம் காவல்நிலைய குற்ற எண்.187/2019 பிரிவு.454, 380 இதச வழககின் தன்மை பற்றி எடுத்துக்கூறி மேற்படி நபரை விசாரிக்க கோரி அவர் பெயர் போத்திராஜா வயது 34

என்றும் தகப்பனார் பெயர் ராமசாமி என்றும் கூறியதாகவும் எங்கள் முன்னிலையில் மேற்படி நபரை கைது செய்து பேோலுசார் விசாரித்தபோது மேற்படி நபர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும் அதை தொடர்ந்து மேறப்டி நபர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை போலீசார்கைப்பற்றியதாகவும் அதன் பின்பு எங்களை போத்திராஜா தனது வீட்டிற்கு அழைத்து சென்று அவர் வீட்டிலிருந்து 1லட்சம்பணத்தை எங்கள் முன்னிலையில் சார்பு ஆய்வாளரிடம் ஆஜர் செய்ததாகவும் அதனை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றியதாகவும் அதிலும் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.